
www.tamilarangam.net

# சிந்தனை

தை - மாசி
1991






உள்ளே:


* இந்தியா, ஒரு பார்வை. பேட்டி : மிஹார் தேசாய்
* மத்திய கிழக்கில் ஆக்கிரமிப்பு
* புதிய மொந்தையில் பழைய கள்!
* ஐக்கிய முன்னணி பற்றி.....
* ஒரு வர்க்கத்தின் வரலாற்றுக் குறிப்புக்கள்
* எங்கள் காலையும் அந்தியும்/ இல்லாமல் போன ஈரம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உங்களுடன் சில வார்த்தைகள்.....


"தமிழ் மக்களின் இருள் சூழ்ந்த நிட்சயமற்ற நிகழ் காலத்தில்....." என நாம் ஐந்து வருடங்களுக்கு முன் எழுதிய நிலமைகளிலிருந்து இன்று வரை எந்த வித விடியலும் கண்ணிற்குத் தெரிவதாக இல்லை.

சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலம் சிந்தனையை வளர்க்கலாம் என்ற நமது நம்பிக்கை, சொந்த நாட்டைப் பொறுத்த மட்டில் வெறும் கனவாகவே இன்றும் உள்ளது.... துப்பாக்கிக் கலாசாரத்தில் இருந்து மக்கள் தம்மை இன்னும் விடுவிக்க முடியாதவர்களாகவே இருக்கின்றார்கள்.

ஆனால் மேற்கு நாடுகளிற்குப் புலம்பெயர்ந்த மக்களின் சுதந்திரமான கருத்துப் பரிமாற்ற முயற்சிகள் ஒரு புதிய பரிணாமத்தைப் பெற்றிருக்கிறதென்றே கூறவேண்டும். பெரும்பான்மையானவர்களின் குட்டிமுதாலாளித்துவ அசமந்தாமான போக்குகளின் மத்தியிலும் பல தமிழ் பத்திரிகைகளின் தோற்றம், இரண்டு வயதைத் தாண்டியிருக்கும் "இலக்கியச் சந்திப்பு" இவையெல்லாம் இந்த வளர்ச்சியின் அறிகுறிகள்.

இவற்றினூடாக ஏற்படும் புரிந்துணர்வுகளும் கருத்துப்பரிமாற்றங்களும் மேலும் தீர்க்கமான செயற்பாடுகளுக்கு இட்டுச் செல்ல வேண்டுமென்பதே எமது அவாவாகும்.

இதற்கான எமது பங்களிப்புகளை இந்தப் புதிய வருடத்திலும் செய்ய முழுமுயற்சிகளையும் எடுப்போம்.



வளைகுடாப்பகுதியில் தனது ஆக்கிரமிப்பை மேற் கொண்டிருக்கும் உலக எதிரி ஜனாதிபதி புஷ் அமெரிக்க மக்களுக்கு பின் வருமாறு கூறியுள்ளான், "வளைகுடா இன்னுமொரு வியட்னாமாக இருக்கப்போவதில்லையென உங்களுக்கு நாம் உறுதி கூறினோம். அந்த உறுதிமொழியை நாம் காப்பாற்றித் தந்திருக்கின்றோம்.

வியட்னாம் பிசாசு இனிமேல் தலைகாட்ட முடியாத அளவுக்கு அராபியக்குடாவின் பாலைவன மணல்களில் புதைக்கப்பட்டு விட்டது. புதிய உலக அமைப்பிலே நாம் சந்தித்த முதல் பரீட்சையில் சித்தியடைந்து விட்டோம்."

வியாட்னாம் மக்களின் தீரமிக்க போராட்டங்களினாலும், சர்வதேச எதிர்ப்பினாலும் மூக்குடைபட்டுப் பின்வாங்கிய அமெரிக்க ஏகாதிபத்தியம், "புதிய உலக அமைப்பு" என்ற தனது ஆதிக்கத்தை மீளக்கட்டியெழுப்பும் முயற்சியில், செல்லரித்துப் போன அராபிய மன்னர்களின் ஆதரவுடனும், சதாம்ஹுசேனின் முட்டாள்தனத்தினாலும் வெற்றி கண்டுள்ளது.

இந்த வெற்றிக் களிப்பில் 1950களில் கொரியாவில் சீன,கொரியமக்களிடம் தமக்கேற்பட்ட தோல்வியை ஈடுசெய்ய வட கொரியாவைப் போருக்கிளுக்க முயற்சிக்கின்றது.

உலகெங்கும் போர்களை உருவாக்கி தமது ஆயுதங்களை விற்று இலாபமடைய ஏகாதிபத்தியங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. அதன் பயன் உலகெங்குமுள்ள ஏழைமக்கள் மேலும் ஏழைகளாகி பட்டினியிலும் பஞ்சத்திலும் வாடுகின்றனர்.

இதற்கெல்லாம் தீனிபோட நமது நாட்டிலும் ஆயுதக்காலாச்சாரத்தினால் முடிவில்லாத போர் தொடருகின்றது. இவற்றிக்கெதிராக உலகளாவிய ஏகாதிபத்திய விரோத, யுத்த எதிர்ப்பு இயக்கங்கள் பலப்படுத்தப்பட வேண்டும்.

( அட்டைப்படம் நன்றி Sozialistische Zeitung)

www.tamilarangam.net

# சிந்தனை

1/91



ஆரம்பம் 1985

சுதந்திரமான கருத்துப் ரிமாறல்கள் மூலமே சிந்தனை ருவாகின்றது.

SINTHANAI
Haussmannstr. 107,
7000 Stuttgart 1,
GERMANY.

யுத்த நிறுத்தம், யுத்தநிறுத்த மீறல்கள், மீண்டும் யுத்தம் ...... என்று ஆரம்பமாகிய புதுவருடம் மீண்டும் வழக்கமான நிலமைகளுக்கு - மோதல்கள், குண்டுவீச்சு, சுற்றிவளைப்பு, தேடல்கள், மக்களின் பசி, பட்டினி, முகாம் வாழ்க்கை - திரும்பியுள்ளது.

மக்களின் நலன்களையோ அல்லது உரிமைகளையோ எந்த விதத்திலும் கணக்கிலெடுக்காத ஒரு யுத்தம், அவர்கள் மீது திணிக்கப்பட்டு, அவர்களின் சம்மதமின்றியே தொடர்கின்றது.

இந்த நிலமைகளுக்கு முழுமுதற்காரணியாக இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவதோ அல்லது அதனிடம் அரசியல் தீர்வுகளை எதிர்பார்ப்பதோ அரசியல் அறிவீனமாகவே இருக்க முடியும்.

தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் ரீதியான தீர்வுகளைக் காண்பதற்குக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களையெல்லாம் உதாசீனம் செயததுமல்லாமல் அந்த சந்தர்ப்பங்களையெல்லாம் தமிழ் மக்களைப் பலவீனப்படுத்தவும் தனது பேரினவாத நடவடிக்கைகளை மேலும் தீவிரமாக்கவும் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ளவுமே இந்த அரசாங்கம் பாவித்துள்ளது என்பதனை கடந்த கால நிகழ்வுகள் காட்டியுள்ளன.

இந்த அரசாங்கத்தின் மாய்மாலங்களை மேலும் நம்பி தமது நடவடிக்கைகளைத் தொடருபவர்கள் தமது மக்களுக்கே துரோகம் செய்பவர்களாகவே இருக்க முடியும்.

ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவோ அல்லது அதன் அடிப்படையிலான அரசியல் தீர்வை முன்வைக்கவோ தவறும் அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களை தேசிய மற்றும் சர்வதேசிய முறையில் அம்பலப்படுத்துவதற்கும் அதைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கும் அவசியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதே நேர்மையான அரசியல் சக்திகளின் கடமையாகும்.

இந்நோக்கத்தைச் சாத்தியமாக்கக்கூடிய சகல வெகுஜன நடவடிக்கைகள், ஐக்கிய முன்னணித் தந்திரோபாயங்கள் ஆகியவற்றினை ஊக்குவிப்பதும் பங்குகொள்வதும் இன்றைய அவசர, அவசிய நடவடிக்கைகளாக உள்ளன.

20.02.1991

www.tamilarangam.net



திருமதி. மனோராணி

## அன்னையர்முன்னணி

அன்னையர் முன்னணியின் முதலாவது அங்குரார்ப்பண தேசிய மாநாடு 19.2.91ல் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றது.இன மத பேதமின்றி வட-கிழக்கையும் இந்த முன்னணியில் இணைத்துக் கொண்டு சுதந்திரமான அமைப்பாக செயற்படுவதென்று இங்கு தீர்மானிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான அன்னையர், தூதரக அதிகாரிகள், பல வெளிநாட்டு நிருபர்கள், சர்வ தேச தொலைக்காட்சி நிறுவத்தினர் ஆகியோர் மாநாட்டுக்கு சமூகமளித்தனர்.

மாநாட்டில் தாய்மார் பலரும் தமது அன்புக்குரியோரை இழந்த துயரை விபரித்தபோது மண்டபத்தில் கூடியிருந்த தாய்மார் பலரும் அழுதேவிட்டனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி சுஜிவர்தனம், டாக்டர் திருமதி. மனோராணி சரவணமுத்து, தென் மாகாணத்தைச் சேர்ந்த திருமதி சீலாவதி ஆகியோர் மாநாட்டிற்குத் தலைமைதாங்கினர்.

இந்த மாநாட்டில் தமிழர் கட்சிகளின் தலைவர்களான ஈ.பி.ஆர்.எல்.எப். செயலதிபர் சுரேஷ் பிரேமச்சந்திரன், மட்டக்களப்பு எம்.பி. பிரின்ஸ் காசிநாதர், த.வி.கூட்டணி முக்கியஸ்தர் மாவை சேனாதிராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவர்களைத்தவிர எதிர்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, பொஜன நிதஹஸ் கட்சியின் தலைவி சந்திரிகா குமாரணதுங்க, நவ சமசமாஜ கட்சித்தலைவர் பேர்னாட் சொய்சா, தேச விமுக்தி ஜனதா பக்சய தலைவர் நிஹால் பெரேரா, கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் கே.பி.சில்வா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பெண்விடுதலை அமைப்புக்களின் தலைவிகளான திருமதி மனோரி முத்தெட்டுவேகம, திருமதி சூரியா பெர்ணான்டோ ஆகியோரும் அங்கு பிரசன்னமாக இருந்தனர்.

மகாநாட்டில் எடுக்கப்பட்ட முக்கிய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

* தடுப்புக்காவலில் வழக்குத் தொடரப்படாமல் இருப்போர் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்.
* அரசியல் வன்செயலில் இறந்தவர்களுக்கு மரண சாட்சிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும்.
* காணாமல் போனவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவருக்கு அரச தொழில் வாய்ப்பு வழங்க வேண்டும்.
* பயங்கரவாத தடைச்சட்டம், அவசர கால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களையும், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களையும் அரசு பகிரங்கப்படுத்த வேண்டும்.
* வன்செயலில் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு சமூக சேவை நிறுவனங்கள் மூலம் உதவி செய்யப்படுவதுடன், நஷ்டஈடும் வழங்கப்பட வேண்டும்.
* தகவலில்லாதோர், கடத்தப்பட்டோர் தொடர்பான புகார்கள் பற்றி விசாரிக்க சுதந்திர அணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும்.

## யாழ்.மாவட்டத்தில் கர்ப்பிணிப் பெண்கள், சிசுக்கள் மரணம் அதிகரிப்பு.

யாழ்.மாவட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்கள், சிசுக்களின் மரணங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாக சுகாதாரப்பகுதி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

குண்டுத் தாக்குதல், அதிர்ச்சிகள் மற்றும் அவசியமான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஆகிய காரணங்களினால் பிரசவம் முடிந்தவுடனேயே தாய்மாரும் சிசுக்களும் மரணமடைந்து போன சம்பவங்கள் பல இடங்களில் இடம் பெற்றிருப்பதாக அதிகாரிகள் கூறினர். வாகன வசதியின்மை, வைத்தியசாலைகள் இயங்காமை போன்றவற்றினால் உரிய சிகிச்சை இன்றியும் பல மரணங்கள் சம்பவிக்கின்றன.

அண்மைக் காலத்தில் மாத்திரம் இம் மாவட்டத்தில் 18 கர்ப்பிணித் தாய்மார்கள் இறந்திருப்பதாக யாழ். சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

www.tamilarangam.net

## வடக்கில் பட்டினி அவலம்.

தொடரும் யுத்த நிலமைகளினால் யாழ்குடாநாட்டிற்கும் மற்றைய பகுதிகளுக்கும் இடையில் போக்கு வரத்துகள் தடைப்பட்டுள்ளன. கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களுடன் வரும் லொறிகள் ராணுவ தடைமுகாம்களில் கிழமைக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இதனால் வடபகுதியில் உணவு விநியோகத்தில் தடைகள் ஏற்பட்டுள்ளதுடன் விலைவாசிகளும் உயர்ந்துள்ளன. அரிசி கிலோ 55 ரூபா, மா கிலோ 40 ரூபா, சீனி 60 ரூபா, தேங்காய் எண்ணெய்போத்தல் 110 ரூபா, பாண் 13 ரூபா, மண்ணெண்ணெய் போத்தல் 100 ரூபா, காய்கறி கிலோ 50க்கு மேல், சவர்க்காரம் கட்டி ஒன்று 30 ரூபா ஆக விற்கப்படுகின்றன.

வடபகுதியில் பணப்புழக்கமும் மிக குறைவாகவே உள்ளது. பெரும் பாலானவர்கள் ஒரு நேர உணவுடனேயே கஷ்டப்படுகின்றனர்.

## மூன்று நாளில் 300 பீப்பாய்க் குண்டுகள்.

ஜனவரி மாதமுதல் மீண்டும் ஸ்ரீ லங்கா அரச விமாணங்களினால் ஆரம்பிக்கப்பட்ட குண்டு தாக்குதல்கள் பாரிய அழிவுககளை ஏற்படுத்தியுள்ளன.

வல்வெட்டித்துறை, வவுனியாவில் பொதுமக்கள் இலக்குகள் மீது கண்மூடித்தனமான குண்டுத்தாக்குதல்கள் நடை பெற்றுள்ளன. ஜனவரி 20ம் திகதிக்கும் 23 ம் திகதிக்கு மிடையில் வல்லிவெட்டித்துறை நகரில் 300 பீப்பாய்க் குண்டுகள் போடப்பட்டதால் வீடுகள், கோவில்கள், கடைகள், பாடசாலைகள் என்பவை நிர்மூலமாக்கப்பட்டன. வல்வெட்டித்துறை நகரில் 500 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் பாதிப்படையாத கட்டிடம் எதுவும் இல்லை என்று கூறலாம்.

மக்களுக்கு முன் எச்சரிக்கையாக துண்டுப்பிரசுரங்கள் போடப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், பிரசுரத்தில் விதிக்கப்பட்ட காலக்கெடுவுக்கு முன்னரே குண்டுத் தாக்குதல்கள் ஆரம்பித்து விட்டன.

குண்டுத் தாக்குதல்களுடன் பலாலி முகாமிலிருந்தும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஏழு பேர் இறந்ததுடன் இருபதிற்கும் மேற்பட்டோர் இதில் காயமடைந்தனர்.

(பொ. வல்லிபுரம் - 2.2.91)

## நோயாளர் துயரம்!

யாழ்.போதனா வைத்தியசாலையில் பல்வேறு "கிளினிக்"குகளிலும் ஆயிரக் கணக்கான நோயாளர்கள் வந்து பரிசோதிக்கப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டு வருவது வழக்கம்.

ஆனால் தற்போது பரிசோதிக்கப்பட்டு மருந்துச் சீட்டுகளே வழங்கப்பட்டு வருகின்றன. அதனால் வெளியால் உள்ள மருந்துகளிலும் தற்போது மருந்து வகைகள் வரத்தின்மையால் பல் வேறு பிரயாணக் கஷ்ட்டங்களை மேற் கொண்டு வந்தும் வெறுங்கையுடனே வீடு செல்லுகின்றனர்.

மந்திகையில் உள்ள ஆதார வைத்திய சாலையிலும் மருந்துத் தட்டுப்பாட்டினால் சில கிளினிக்குகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. நெடுந்தீவிலுள்ள கடும் நோயாளர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவர சுமார் ரூபா 5000 முதல் 6000 செலவிட வேண்டியுள்ளது. ஆனால் வந்தும் போதிய மருந்துகள் இன்மை காரணமாக பெரும் செல்வந்தர் தவிர்ந்தவர்கள் இங்கு மருத்துவ சிகிச்சைக்கு வருவதில்லை.

இதே வேளை சாதாரண மருந்து வகைகளே இல்லாமையினால் தனியார் வைத்திய நிலயங்களும் மூடப்பட்ட நிலையில் உள்ளன. இதைவிட நெருப்புக் காய்ச்சல், வயிற்றுளைவு போன்றவற்றுக்குரிய நுண்ணுயிர்க் கொல்லிகளும் கிடைப்பதில்லை.

மார்புச்சளிக்குரிய மருந்து வகைகள், ஊசிமருந்துகள், வரத்தின்மையினால் நோயாளர் பெரும் வேதனையுறுகின்றனர். இதனால் மருத்துவ மனைகள் இருந்தும் நோயாளர் மடிகின்றனர்.

ஆர்.ரி. சுப்பிரமணியம் (வீரகேசரி 16.2.91)

## யாழ் நகரில் மக்கள் ஊர்வலம்!

விமானத்தாக்குதல், விலைவாசிகள் உயர்வு ஆகியவற்றை எதிரத்து யாழ்நகரில் மக்கள் ஊர்வலம் ஒன்று தை மாதத்தில் நடை பெற்றது. யாழ்.குடா நாட்டில் மேற் கொள்ளப்படும் விமான ஹெலி தாக்குதல்களை நிறுத்தக் கோரியும், விஷம் போல ஏறி வரும் உணவு, எரி பொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டனம் செய்தும் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

"வியாபாரிகளே,ஏழைகளின் வயிற்றில் அடிக்காதீர்!
பொம்மருக்கும் பங்கர், அங்கருக்கும் (பால்மா) பங்கரா?
மண்ணெண்ணெய் பதுக்கினால் மண் மீட்புக் கிடைக்குமா ?"

போன்ற பல வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகள் இந்த ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன.

யாழ்.பல்கலைக்கழகப் பகுதியிலிருந்து ஆரம்பித்த ஊர்வலம் கச்சேரியைச் சென்றடைந்தது. மக்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று யாழ்.அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

சகல விடயங்களையும் தமது கையிலுள்ள துப்பாக்கியால் சாதிக்க முடியுமென்று நம்பும் புலிகளினால் கூட விலைவாசி உயர்வதையும் பதுக்கல்காரர்களையும் ஒழிக்க முடியாது என்பதை மக்கள் உணர்ந்து கொண்டதை இந்த ஊர்வலம் காட்டுகின்றது. சாப்பிடுவதற்குத் தவிர வெறு எதற்கும் மக்களை வாய்திறக்க அனுமதிக்காத புலிகள் இந்த ஊர்வலத்தை அனுமதித்திருப்பது அவர்கள் இன்றுள்ள தர்ம சங்கட நிலமையை உணர்த்துகின்றது.

www.tamilarangam.net

# மத்திய கிழக்கில் ஆக்கிரமிப்பு

வளைகுடாப் போர் ஆரம்பிப்பதற்கு முன் இடம் பெற்ற விவாதங்களும் சந்தேகங்களும் இப்பொழுது தீர்க்கப்பட்டுள்ளன. இந்தப் போரின் உண்மையான நோக்கம் என்ன என்பதே முதலாவது விவாதமாகும். குவைத் சம்பந்தமாக ஒருவர் என்ன கருத்தைக் கொண்டிருந்தாலும், வளைகுடாப் பகுதியில் குவிக்கப் பட்ட பெரும் தொகையான அமெரிக்கத் துருப்புக்கள் அந்த நாட்டை "விடுவிப்பதற்காகக்" குவிக்கப் படவில்லை என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்க முடியாது. இந்தப் பகுதியில் எடுக்கப்பட்ட ராணுவ நடவடிக்கைகள், அராபிய மற்றும் முஸ்லீம் நாடுகளிலுள்ள ஏகாதிபத்திய நலன்கள் மீது உருவாக்கக் கூடிய எதிர் விளைவுகளையிட்டுப் பயந்து, அதற்குப் பதிலாக தொடர்ச்சியான பொருளாதாரத் தடைகளினால் இரத்தம் சிந்தாத தீர்வுகளை சில அமெரிக்க அதிகாரிகள் விரும்பினார்கள். ஆனால் ஜனாதிபதி புஷ்ஷினதும் அவரின் கூட்டத்தினரதும் நோக்கம் அதுவல்ல. முழு உலகத்தின் பொலிஸ்காரராகத் தம்மை நியமித்துக் கொண்ட இவர்கள் தங்களது அடுத்த ( எண்ணை வளம் உள்ள) "டெக்லாஸ்" மாகாணமான சவுதிஅரேபியாவைப் பாதுகாப்பதற்கு, ஐக்கியயநாடுகள் பாதுகாப்புச்சபையில் இணைந்த வல்லரசுகள் தீர்மானித்த பொருளாதாரத் தடையை நடைமுறைப்படுத்துவதற்கு தேவைக்கும் அதிகமான படைகளை அந்தப் பகுதிகளுக்கு அனுப்பி வைத்தனர். ஆரம்பத்திலிருந்தே வாஷிங்டன் ஆட்சியாளரின் உண்மையான நோக்கம் ஈராக்கின் ராணுவப்பலத்தை அழித்தொழிப்பதாகவே இருந்தது.

ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர்களான பேக்கருக்கும் அஸீசுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது புஷ், சதாம்ஹுசேனுக்கு எழுதிய உத்தியக பூர்வமான கடிதத்தில் இது தெளிவாகக் கூறப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தில், "குவைத்தை விட்டு வெளியேறு அல்லது பலவந்தமாக வெளியேற்றுவோம்" எனக் கூறப்படவில்லை, "நிபந்தனையின்றி வெளியேறு அல்லது உன்னுடைய ராணுவ அமைப்புகளை நிர்மூலமாக்குவோம்" என்ற அர்த்தத்தில் எழுதப்பட்டிருந்தது. இது ஈராக்கிய சர்வதிகாரி குவைத்திலிருந்து வெளியேறினாலும் ஈராக் மீதான நெருக்குவாரங்கள் நிறுத்தப்படமாட்டாது என்பதைத் தெளிவாக்கியது.

ஈராக் நிபந்தனையின்றி குவைத்திலிருந்து வெளியேறினாலும், சதாம் ஆக்கிரமிப்பிற்கான விலையைக் கொடுக்கச் செய்வதற்கும், ஈராக்கின் ராணுவ வலிமையை அழிப்பதற்கும் பொருளாதாரத்தைச் சிதைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அமெரிக்க அதிகாரிகளும் நிபுணர்களும் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வந்துள்ளனர்.

"பாலைவனப் புயல்" என அழைக்கப்பட்ட தாக்குதல்களின் குறிகள் இதைத் தெளிவாகக் காட்டின. ஏராளமான விமானங்களும் ஏவுகணைகளும் ஈராக்கின் ராணுவஅமைப்புக்கள் மீது குறிவைத்துத் தாக்கியுள்ளன. ஈராக் ராணுவத்தை மீளக்கட்ட முடியாதபடி, அணு, ரசாயன, ஆயுத தொழிற்சாலைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

எதிரி இறுதிவரை போராடுவான் என்று தெரியவரும் பொழுது நடாத்தப்படும் தாக்குதல்களை, ஆரம்பத்தாக்குதல்களிலேயே அமெரிக்க விமானப்படைகள் நடாத்தின. இது குவைத்தை விடுவிப்பது, சதாம்ஹுசேனின் அரசாங்கத்தை வீழ்த்துவது என்பது எல்லாவற்றையும் தாண்டி ஈராக் மீதான ஆக்கிரமிப்பாக மாறியது.

ஈராக்கின் ராணுவ வலிமையை நிர்மூலமாக்க அமெரிக்காவும் அதன் நண்பர்களும் முனைவதின் நோக்கம்; கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அரேபிய நாடுகளுக்கு மேலாக மேலாண்மை செலுத்துகின்ற ஸியோனிச (இஸ்ரேல்) அரசுக்கு ஆபத்தாகவும், அமெரிக்காவின் செல்லப்பிள்ளைகளாகவும் பணம் கொடுத்து உதவுபவர்களாகவும் விளங்கும் அரேபிய அரசுகளுக்கு ஆபத்தாகவும், உலக எண்ணைய்ச் சந்தையில் தலையிட்டுக் கொண்டும், வளைகுடாவில் அமெரிக்காவின் திட்டங்களுக்கு எதிராகவும் இருக்கக் கூடிய ஒரு பிரதேச சக்தியாக ஈராக் வளர்வதைத் தடுப்பதேயாகும்.

இதுவே ஆரம்பத்திலிருந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நோக்கமாக அமைந்திருந்தது. மக்களுடைய சமாதான உணர்வுகளையும் மதிக்காது, அமெரிக்காவின் நடவடிக்கைகளை "சர்வதேச சட்ட நடவடிக்கை"யென வர்ணித்த சமூகஜனநாயகவாதிகள் அமெரிக்காவின் வலையில் சிக்கிக் கொண்டார்கள். சோவியத் அதிகாரத்துவம் நம்பிக்கைகள் எல்லாவற்றையும் இழந்து தன்னைத் தாழ்த்திக் கொண்டது. ஐ.நா. சபையில் அமெரிக்காவுடன் ஒத்துழைப்பதற்காக பணஉதவிகளைப் பெற்றதுடன், லித்துவானிய மக்களை ஒடுக்கவும் இச்சந்தர்ப்பத்தைப் பாவித்துக் கொண்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜோர்ஜ் புஷ் "புதிய உலக திட்டத்தை" அமுல் நடத்த நடத்தும் முதலாவது யுத்தமே வளைகுடாவில் நடைபெற்றது. இந்த யுத்தம் கடைசி யுத்தமுமல்ல.

1967ல் அரேபிய மக்கள் ஏககாலத்தில், வியட்நாமிய மக்களின் தீரமிக்க போராட்டங்களையும் இஸ்ரேலுடன் தமது அரசுகள் தோல்வியுற்றதையும் கண்டு, படித்தபாடங்களைப் போலவே இன்றைய சந்ததியினரும் படிக்க வேண்டியுள்ளது.

அரேபிய நாட்டு உளுத்துப் போன சர்வதிகாரங்கள் ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டங்களை நடத்த திராணியற்றவைகளாகவே இருக்கின்றன. அதிஉயர்ந்த தொழில்நுட்ப வளர்ச்சி பெற்ற ஏகாதிபத்திய நாடுகளை, மக்களின் நீண்ட புரட்சிகரப் போராட்டங்களினாலேயே தோற்கடிக்க முடியும். உலக ஏகாதிபத்திய விரோத மற்றும் ராணுவ எதிர்ப்பு இயக்கங்களின் ஆதரவு இந்த மக்களின் போராட்டங்களுக்கு அவசியமாகும். இந்த மக்கள் அவர்களை ஒடுக்கும் சர்வதிகாரங்களை தூக்கியெறிவதற்கு முதற்படியாக அவசியமானது, இன்று ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதில் வெற்றி காண்பதேயாகும்.

– வசந்தன்.

## கொலம்பியாவாக மாறிவரும் கொழும்பு

இலங்கையில் வெளிநாட்டவர்கள் நடவடிக்கைகள் பற்றி காலம சென்ற அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையின் ஒரு பகுதி:

ஜோசிம் எனப் பெயர் கொண்ட வெளிநாட்டவர் ஒருவர் தொடர்பாக எனக்குத்தரப்பட்ட தகவல்கள் அடிப்படையாகக் கொண்டே இவ்வறிக்கையை நான் விடுகிறேன்.

கிம் ஹெங் சியே என்பவர்தான் ஜேசிம் என்ற பெயரில் திரிவதாக பொலிஸ் திணைக்களம் நடத்திய விசாரணைகள் புலப்படுத்துகின்றன. இந்த இரண்டு பெயர்களிலும் பல வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை வைத்துக் கொண்டு இவர் செயற்பட்டு வருவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சிலிங்கோ கட்டிடத்தின் ஆறாவது மாடியில் உள்ள "ட்ரிபொன்ட் குரூப் ஓஃப் கம்பனீஸ்" என்ற பெயரின் கீழ்தான் இந்த ஜோஸிம் செயற்பட்டு வருகின்றார். இந்த குரூப்பில் அல்கொட் இன்டர்நாஷனல் ட்ரூல்(பிரைவேட்)லிமிட், ட்ரிபொன்ட் லங்கா(பிரைவேட்)லிமிட், த செஞ்சரியன் கிளப் லங்கா, கொண்டினென்டல் கிளப், கேர்சன் கிளப், ஜேட் கார்டினல், ஜூனியல் மனிங் (பிரைவேட்) லிமிட் என்ற நிறுவனங்கள் அடங்கியுள்ளன.

இலங்கையில் சூதாட்டங்களில் பங்கேற்பதற்காக வெளிநாட்டுப் பிரஜைகளுக்கென தனியான பயண சேவைகளையும் இவர் நடத்தி வருகிறார். செலவாணி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளுக்கு முரணாக வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களிலும் இவர் ஈடுபடுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

* * * *

வதிவிட விசாக்கள் மோசடி தொடர்பான விசாரணைகளையும் புலனாய்வுகளையும் தொடர்ந்து மேற்கொண்டுவரும் விசேட நடவடிக்கை செயற்பாட்டு பணியகப் பொலிசார் இதுவரை 22 வெளிநாட்டவர்களைக் கைது செய்துள்ளனர்.

இவர்களில் ஐந்து சீனர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டனர் எனவும் கனேடியப்பிரஜை எனக் கூறிக்கொண்ட தமிழர் ஒருவர் அதற்கான தக்க ஆவணங்கள் இல்லாத நிலையில் கைது செய்யப்பட்டார் எனவும் பணியகப்பணிப்பாளர் ஒருவர் கூறினார்.

வெள்ளிக்கிழமை (23.2.91) பல்வேறு ஹொட்டல்கள், கஸினோக்கள், விடுதிகளிலிருந்து கைது செய்யப்பட்ட 16 பேரில் சில பெண்களும் உள்ளனர் எனவும் அவர்கள் தாய்லாந்து, சிங்கப்பூர், மலேஷியா, ஹொங்கொங் நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் பணிப்பாளர் கூறினார்.

இவர்களை விசாரித்த வேளையில் இவர்களிடம் காணப்பட்ட ஆவணங்கள் மோசடி செய்யப்பட்டவையாக காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ....

*வாசகர்களிடமிருந்து ஆக்கங்களையும் விமர்சனங்களையும் "சிந்தனை" வரவேற்கின்றது. ஆக்கங்களும் விமர்சனங்களும் அனுப்பப்படவேண்டிய முகவரி:*

SINTHANAI, Haussmannstr. 107, 7000 Stuttgart 1, GERMANY.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய மொந்தையில் பழைய கள்!

வரலாறு எத்தனை பாடங்களைத்தான் கற்பித்தாலும் அதைக் கற்கமுடியாத சில "புத்திஜீவிகள்"மக்களைக் குழப்பவும் அவர்களைத் தமது சித்தாந்தப் பரிசோதனைகளால் பலி கொடுப்பதற்கும் பின்னிற்க மாட்டார்கள் என்பதை நாம் சமீபகாலத்திலும் காணக்கூடியதாகவிருக்கின்றது.

தேசியவாதம், தேசியமுதலாளித்துவம், தேசபக்த சக்திகள், தேசியசக்திகள் எனப்பலவாறான பெயர்களைப் புனைந்து கொண்டு இன்றைய தமிழ்மக்களின் நிலைமைகளில் தமது கடந்தகால கையாலாகாத்தன்மைகளையும் வருங்காலத்தில் தமது பழைய ஊடுருவல்களைப் பழைய குருடி கதவைத் திறவடி என்று மீள ஆரம்பிப்பதற்கும் இன்றைய தத்துவ விளக்கங்கள் ஆரம்பமாகியுள்ளன.

விடுதலைப்புலிகள் இயக்கத்தினை தேசியசக்திகளாக ஆதரிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டை எடுக்கும் குழுவினரின் நிலைப்பாட்டினை விமர்சனம் செய்வதுதான் எமது நோக்கம். இவர்கள் நிலைப்பாட்டினை எடுப்பதற்கான அடிப்படைக்காரணம் இவர்கள் காலகாலமாக உள்வாங்கிக் கொண்ட சித்தாந்தக் கரு என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் மீண்டும் மீண்டும் உலக வரலாறுகள் இந்த வரைவிலக்கணத்தை பொய்ப்பித்தது மாத்திரமல்ல பல்லாயிரக்கணக்கான போராட்டவார்வமிக்க தொழிலாளர்களையும் அப்பாவிமக்களையும் பலி கொண்டதையும் இவர்கள் மறந்து மீண்டும் ஒரு சந்ததியைத் திசை திருப்பி பலிக்களத்தைத் தயார் செய்கின்றனர் என்று நாம் கருதுகின்றோம்.

தேசியவாதம் என்பது இரு முகங்களைக் கொண்டது. ஒன்று அதற்குள்ள முற்போக்கு முகம், மற்றையது அதற்குள்ள பிற்போக்கு அம்சம். ஒரு ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் தேசியவாதம் அதன் விடுதலைக்காகப் போராடும் பொழுது முற்போக்கானது தான் அது போலவே ஒடுக்கும் இனத்தின் தேசியவாதம் பிற்போக்குத் தன்மையுள்ளது. மறுபுறத்தில் தேசியவிடுதலையை முன்னெடுக்கும் வர்க்கம் தேசிய முதலாளித்துவமாக இருக்கும் பொழுது அது தன் வர்க்கக் குணாம்சங்களை ஒவ்வொரு கட்டத்திலும் வெளிக்காட்டிக் கொண்டிருக்கும்.

ஜேர்மனிய தேசிய வாதம் நாஜியிசமாக யூதர்களை அடக்கிய பொழுது ஒடுக்கப்பட்ட இனமாக யூதர்கள் இருந்தாலும் யூதர்களின் தேசியம் இன்று சியோனிசமாக அராபியர்களை அடக்குகின்றது. அதே அராபிய தேசிய வாதம் குருதில் மக்களை ஒடுக்குகின்றது. இந்த தேசியவாதத்தை தமது வர்க்க முன்னேற்றத்திற்கு பயன்படுத்துவதற்காக ஆளும் வர்க்கங்கள் தமது பிற்போக்கு நகங்களை எவ்வளவு விரைவில் வெளிக் கொண்டு வருவார்களோ, அவ்வளவு விரைவில் வெளிக் கொண்டு வருவார்கள்.தேசிய முதலாளிகளுடன் கூட்டுச் சேர்தல், அவர்களுக்கு ஆதரவு அளித்தல் இவையெல்லாம் புதிய சிந்தனைகள் அல்ல

இன்று புலிகளின் போராட்டம் சரி. புலிகள் சரியில்லை. புலிகளின் சில நடவடிக்கைகள் சரி அவர்களின் ஜனநாயகமற்ற தன்மை பிழை...

வரலாற்றில் என்றுமே மறக்க முடியாத சீன இரண்டாவது புரட்சியின் இரத்த வரலாற்றை நாம் எப்படி மறக்க முடியும்? 1926 27 களில் தேசிய சக்தியான கொமிங்டாங்குனுடன் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கூட்டுச்சேர்ந்ததின் விளைவாக எத்தனையோ தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இதற்குக் காரணமான கொமிங்டாங் தலைவன் சியாங்குசெக்கை கம்யூனிஸ்ட் அகிலத்திற்குள் அழைத்துச்

www.tamilarangam.net

சென்றதும் இந்த தேசிய சக்திகளுக்கு ஆதரவு கொடுக்கும் கொள்கை தானே? இந்த இரத்த வரலாறுகள் ஒவ்வொரு நாட்டிலும், இந்தோனோஷியாவிலிருந்து இலங்கை வரை நீண்டு இருக்கின்றன.

சிங்களத் தேசிய வாத சக்தியாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியை ஆதரித்த பழைய இடதுசாரிகளின் அழிவை நாம் கண் முன் கண்டு கொண்டோம். தென்னாசியாவிற்கே ஒரு முன்மாதிரியாக விளங்கிய இந்த இடதுசாரிக்கட்சிகளை சீரழித்ததும் இந்த தேசிய சக்திகளுக்கு வால் பிடிக்கச் சென்ற கொள்கைகள் தான். 1964 களில் ஏற்பட்ட இந்த சீரழிவின் விளைவுகளை இன்றும் நாடு அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்த இலங்கை சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும்(மொஸ்கோ), சிறிலங்கா சுதந்திரக் கட்சியுனுள் உள்ள முற்போக்கு அம்சங்களை ஆதரிக்கவும் ஆதன் ஊடாக சோசலிச திட்டங்களை அமுல் நடத்தப்போவதுமாகவே கூறினர் ஆனால் நடந்தது என்ன?

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தவறுகளுக்கெல்லாம் இவர்கள் பலியாகினர், நன்மைகள் எல்லாம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சென்றடைந்தன. பலம் பொருந்திய தொழிற்சங்கங்களின் போராட்டங்களின் மூலம் வெற்றிகளைப் பெறுவதற்குப் பதிலாக மந்திரிகளின் ஆதரவின் மூலமாகச் சலுகைகளைப் பெறலாம் என தொழிலாளர்கள் எண்ணத்தலைப்பட்டனர். பாரியளவில் இடதுசாரித் தொழிற்சங்கங்கங்களில் இருந்து தொழிலாளர்கள் ஸ்ரீசுதந்திரக் கட்சித் தொழிற்சங்கங்களுக்கு மாறினர். (இவர்கள் பின்னர் யு.என்.பி தொழிற்சங்கங்களுக்கு மாறினாகள். இடதுசாரித்தலைவர்கள் மறுபுறத்தில் போராட்டங்களை முன்னெடுத்த தொழிலாளர்களைத் தண்டித்தனர்- அல்லது தமது தொழிலாளர்களை கருங்காலிகளாக மாற்றினர். மொரெட்டுவையில் நடைபெற்ற வெலோனா பனியன் கம்பனி வேலை நிறுத்தம், (1967 ஏப்பிரல்) துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் என்பன சில உதாரணங்கள். தேசிய சக்தியான சுதந்திரக்கடசி தேசிய முதலாளிகளை வளர்த்தது. தேசியமுதலாளித்துவத்தின் தேவைகளுக்காக பாவிக்கப்பட்ட இடது சாரிச் சக்கைகள் வெளியில் தூக்கியெறியப்பட்டனர். போராட்ட பாரம்பரியத்துடன் வளர்க்கப்பட்ட இடதுசாரித் தொழிலாளவமைப்புகள் சீரழிந்து அவற்றினிடத்தில் சுதந்திரக் கட்சித் தொழிற்சங்கங்களும் யு.என்.பி தொழிற்சங்கங்களும் நிலை கொண்டன. இந்த இடைவெளியில் நடைபெற்ற சிங்கள இளைஞர்களின் படுகொலைகள், தமிழ்த் தேசிய இனத்தின் மீதான ஒடுக்குமுறை என்பவை யாவரும் அறிந்த விடயங்கள். ஒரு தேசிய சக்தியை நாம் வளர்க்கும் பொழுது அதன் பிற்போக்கு அம்சங்களை அங்கிகரிக்காமல் முற்போக்கு அம்சங்களை வளர்க்கலாம் என மனப்பால் குடிப்பது அறிவீனமாகும்.

இன்றைய சர்வதேச குழ்நிலைமைகளில் எந்த ஒரு முதலாளித்துவ சக்தியும் ஏகாதிபத்திய ஊடுருவலற்றதாக இருக்கமுடியுமென எதிர்பார்க்க முடியாது. ஆனால் ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்தியங்களினதும் மொசாட்டின் நேரடி உறவுடனும் செயற்படுகின்ற சக்திகளை தேசியசக்திகள் - இவர்கள் வர்க்கக் குணாம்சத்தினால் செய்யும் தவறுகள் இவை என முழுப்பூசணிக்காயை மக்களிடமிருந்து மறைப்பதுதான் வேடிக்கையானது! நமது நாட்டின் உழைக்கும் வர்க்கங்களை அமைப்பாக்குவதற்குப் பதிலாக, அவர்களின் போராட்டங்களை முன்னெடுப்பதற்குப் பதிலாக. அதற்காக ஒரு துரும்பைத் தன்னும் எடுத்துப் போடாமல் மக்கள் புரட்சிகளை வழிநடத்த முடியாது. மக்கள் மத்தியில் வேலை செய்து தொழிலாளர்களை அமைப்பாக்குவதில் தமது வாழ்க்கையை அர்ப்பணித்த தோழர்கள் அண்ணாமலை, விஜயானந்தன் போன்றவர்களின் கொலைகளுக்கெல்லாம் மௌனம் சாதித்தவர்கள் இன்று தமது கொள்கையைக்கடைப்பிடித்த பலரைப் புலிகளுக்குப் பலிகொடுத்த பின்னருங்கூட(பல N.L.F.T போராளிகள் புலிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்) சந்தர்ப்பவாத அரசியலுக்கு மக்களை இழுத்துச் செல்ல முனைவது ஒரு வரலாற்றுத் துரோகமாகும்.

www.tamilarangam.net

அணிதிரட்டவும், சமூக பொருளாதார மற்றும் ஜனநாயக உரிமைகளுக்கான இடைக்காலக் கோரிக்கைகளின் அடிப்படையில் போராட்டங்களை முன்னெடுக்கவும் முடியும்.

இவ்வாறு ஐக்கிய முன்னணியில் அணிதிரளும் மக்களைப் படிப்படியாக ஆளும்வர்க்கங்களுக்கெதிரான இறுதிப்போராட்டத்திற்கு இட்டுச் செல்லக்கூடிய இடைக்கால வேலைத்திட்டங்களுடன் செயற்படுவதே தொழிலாளவர்க்க சக்திகளின் கடமையாகும்.

எந்தவிதமான ஐக்கிய முன்னணிகள் ஏற்பட்டாலும் தொழிலாளவர்க்க சக்திகள் தமது வர்க்கரீதியான அரசியல் மற்றும் வெகுஜனஅமைப்புகளின் சுதந்திரங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். உழைக்கும் மக்கள் அமைப்பாவதற்கும் போராட்டங்களை முன்னெடுப்பதற்கும் எந்தவித இடையூறுகளும் ஏற்படவிடக்கூடாது. சகல முரண்பாடுகளும் உழைக்கும் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் விதத்திலேயே தீர்க்கப்படவேண்டும். எந்தவிதமான முதலாளித்துவ கூட்டு அரசாங்கத்திலும் பங்குகொள்ளக்கூடாது.

( சிந்தனை இல. 1/88 ஆசிரியர் கருத்திலிருந்து ஒரு பகுதி )

## அமெரிக்கப் பண உதவி பெறும் நாடுகள்.

மிக அதிகமாக அமெரிக்கப் பண உதவி பெறும் 10 நாடுகள்

| | | |
|---|---|---|
| இஸ்ரேல் | - | 298 கோடியே 70 லட்சம் டாலர் |
| எகிப்து | - | 237 கோடியே 50 லட்சம் டாலர் |
| பாகிஸ்தான் | - | 58 கோடியே 80 லட்சம் டாலர் |
| துருக்கி | - | 51 கோடியே 60 லட்சம் டாலர் |
| பிலிப்பைன்ஸ் | - | 35 கோடியே 00 லட்சம் டாலர் |
| கிரீஸ் | - | 34 கோடியே 90 லட்சம் டாலர் |
| எல்சல்வடோர் | - | 13 கோடியே 80 லட்சம் டாலர் |
| ஹண்டுராஸ் | - | 21 கோடியே 00 லட்சம் டாலர் |
| பொலிவியா | - | 13 கோடியே 80 லட்சம் டாலர் |
| பங்களாதேஷ் | - | 13 கோடியே 00 லட்சம் டாலர் |

## எங்கள் காலையும் அந்தியும்

பச்சை வெய்யில்
மெல்ல நகர்ந்து
உச்சிக்குக் குதித்தது

தரை பார்த்த
வெங்காயத் தாழ்வையில்
உடம்பெல்லாம்
ஒரே அகோரமாய் கொதிக்க
நாறல் பாக்குக்கும்
பருத்தித்துறை வெற்றிலைக்கும்
ஒருவாய்க்கும் வகையற்று
நனைந்து நாரிச்சீலையில்
நசுங்கிக் கிடந்தது
வெற்றிலைப் பெட்டகம்.

மெல்ல தலை நிமிர்த்திப்
பார்க்கையில்
நயினார் கஞ்சிப்பானையுடன்
பெரிய வளவிலிருந்து
வெளிக்கிட
எல்லோருக்கும் பல்லாய்
கைதுடைக்க வகையற்று
நாரித்துணியில்
கை துடைத்தும்
ஆனாலும்
வஞ்சனையற்ற மண்
எல்லோர் விரல்களிலும்
மருதோண்டி பூசியது

ஒவ்வொரு மங்கிய ஒளியில்
நனைந்த சீலை
சீவுகாம்புப் புகையிலையுடன்
பச்சைவெயிலை எதிர்பார்த்து
ஒவ்வொரு காலையும்......

-- இ.வசந்தி
பிரான்ஸ்

( தாமரை இதழில் முன்பு வெளியிடப்பட்டது)

www.tamilarangam.net

# ஒரு வர்க்கத்தின் வரலாற்றுக்குறிப்புக்கள்

## தலையீடுகளற்ற முதலாளித்துவம்!

19ம் நூற்றாண்டில் பிரித்தானியாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் முக்கிய வளர்ச்சி துணி உற்பத்தியாகவே இருந்த பொழுதிலும் மறுபுறத்தில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலும் நீராவியந்திரங்களும் போக்குவரத்து அபிவிருத்தியும் முக்கிய பங்கு வகித்தன.

இந்த வளர்ச்சிகள் முதலாளிகளுக்கு அதிக இலாபத்தைக் கொடுத்த அதே வேளையில் இந்த வளர்ச்சியினால் உருவாக்கப்பட்ட தொழிலாளர்கள் வறுமையில் உழலும் வர்க்கமாகவே வளர்ந்தனர். 1795ல் 33 ஷிலிங்கைக் கூலியாகப் பெற்ற தொழிலாளர்கள் 1815ல் 14 ஷிலிங்கையும் 1834ல் 5 ஷிலிங்கைக் கூலியாகப் பெற்றறனர். இயந்திரமயமாக்கப்பட்ட தொழில்கள் தொழிலாளர்களின் கூலிகளைக் குறைக்கவே உதவின. மேலும் முதலாளிகள் குறைந்த கூலியில் பெண்களையும் குழந்தைகளையும் அதிகமாக வேலைக்கமர்த்தினர். இன்றும் கைத்தொழில் நகரங்களாகக் கருதப்படும் பேர்மிங்காம், லிவர்பூல் ஆகிய நகரங்களில் பஞ்சமும் பிணியும் – கொலரா போன்ற தொற்று நோய்களும் தொழிலாளர்களின் சேரிகளெங்கும் பரவியிருந்தன.

இந்த மனிதாபிமானமற்ற சுரண்டலை "லைஸ்ச –பயர் லிபரலிசம்" (laissez-faire liberalism) என்ற புதிய கோட்பாட்டின் மூலம் முதலாளித்துவ சித்தாந்த வாதிகள் நியாயப்படுத்தினர். இந்த சித்தாந்தத்தை முதலாளித்துவத்தின் தலைசிறந்த அரசியல்பொருளாதார சித்தாந்தவாதிகளான ஆதாம்சிமித்திலிருந்து டேவிட் றிக்காடோ வரை அபிவிருத்தி செய்தனர். பின்பு இவர்கள் மார்க்சின் விமர்சனங்களுக்கு இலக்காகினார்கள். "laissez-faire" என்ற பிரெஞ்சு பதத்தின் அர்த்தம் "தலைபிடாதே" என்பதாகும் – இங்கு அது பொருளாதார நடவடிக்கைகளில் தலையிடாதே என்பது அர்த்தமாகும். இந்தச் சித்தாந்தத்தின் முக்கிய கூறுகளானவை:–

அ) மற்றைய விஞ்ஞான விதிகளைப் போலவே சந்தையின் விதிகளும் நடைபெறுகின்றன.

ஆ) பொருளாதார நடவடிக்கைகள் மனிததர்மம், சமூகதேவை என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்படத் தேவையில்லை.

இ) சுதந்திரமான சந்தையின் இயக்கம், எந்தவிதமான தலையீடும் இல்லாவிட்டால், எல்லோரையும் சந்தோஷமாக இருக்கச் செய்வதுடன் அனைவரையும் செல்வந்தர்களாக்கவும் வல்லது.

ஈ) தனிச் சொத்துரிமை, திறந்த சந்தையில் போட்டி ஆகியவற்றின் அடிப்படையில், சுயதேவைகளைப் பூர்த்தி செய்ய தனிமனிதர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் பொதுவான நல்வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கின்றது.

உண்மைதான் முதலாளித்துவத்தின் நடவடிக்கைகள் எந்த வித தர்ம நீதியுமற்ற முறையிலேயே நடைபெறுகிறது என்பதில் சந்தேகமில்லை! ஆனால் இவர்களுடைய நீதிமான்களும் மதகுருமார்களும் மனிததர்மத்தைப்பற்றியும் சமூகதேவைகளைப்பற்றியும் பேசத் – நிலப்பிரபுத்துவ காலங்களைப்போல – தவறவில்லை!!

இந்தப் புதிய சித்தாந்தம் மக்களைச் சுரண்டும் முதலாளிகளுக்கு மனச்சாந்தியைக் கொடுக்கப் பாவிக்கப் பட்டது என்றும் சொல்லலாம். தாங்களின் சுரண்டல்பொருளாதாரத்தி னால் எல்லோரும் செல்வந்தர்களாகப் போகின்றார்கள் என தங்கள் நடவடிக்கைகளை அவர்கள் நியாயப்படுத்தினார்கள்.

( தொடரும்)



www.tamilarangam.net

## விமர்சனம்

சிந்தனை ஆசிரியர் குழுவினருக்கு!

வணக்கங்கள். நான் சிந்தனை இதழ்களைக் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக வாசித்து வருகிறேன். கடந்த மார்கழி 1990 வெளியாகியிருந்த ஆசிரியர் கருத்து சம்பந்தமாக சில விடயங்களைக் கூறுவது இங்கு பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன்.

ஆசிரியர் கருத்தின் இரண்டாவது பந்தியில் சிறிலங்கா அரசுக்கும் புலிகளுக்கும் ஏற்பட்ட தொடர்பை வெளிக்காட்டிய நீங்கள் அதே தவறை இன்று மற்றைய இயக்கங்கள் செய்வதாகச் சுட்டிக்காட்டியிருந்தீர்கள். ஆனால் எந்தெந்த இயக்கங்கள் சிறிலங்காவரசுடன் தொடர்புவைத்து புலிகளுக்கெதிரான தாக்குதலை நடாத்தி வருகின்றன என்பதச் சுட்டிக்காட்டத் தவறியது ஏன்?

ஈ.பி.டி.பி, டெலோ, புளொட் போன்ற இயக்கங்கள் சிறிலங்காவரசுடன் சேர்ந்து புலி எதிர்ப்பில் ஈடுபட்டிருப்பது தொடர்பாகப் போதிய ஆதாரங்கள் உண்டு. இதை நியாயப்படுத்தி அவ்வியக்கத் தலைமைகளே அறிக்கைகளை வெளியிடுகின்றன. ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எப் சிறிலங்காவரசுடன் கூட்டுச் சேர்ந்து புலி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது என்ற குற்றச் சாட்டுக்கு இதுவரை ஆதாரமே கிடையாது. வீரகேசரிப் பத்திரிகைக்கு சிறிலங்காவின் பாதுகாப்பமைச்சர் அளித்த பேட்டியில் - ஈ.பி.டி.பி ஊர்காவற்துறையிலும் புளொட் வன்னியிலும் டெலோ மட்டக்களப்பிலும் அரச படைகளுடன் சேர்ந்து புலிஎதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதை உறுதி செய்துள்ளார். ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எப் பற்றி நிருபர் கேட்டபொழுது "அவர்கள் எங்களுக்கு ஆதரவு தருகிறார்கள் இல்லை" என்றும் "அவர்கள் பாராளுமன்றத்தில் அரசை சொற்களால் தாக்குகிறார்கள்" என்றும் கூறியுள்ளார்.

தங்களது மூன்றாவது பந்தியில்"புலி இயக்கம் செய்த அதே தவறை மற்றைய தமிழ் இயக்கங்கள் சில மேற்கொண்டிருப்பதே வேதனை தரும் விடயமாக இருக்கின்றது" என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அந்தச் சில இயக்கங்களைப் பெயர் குறிப்பிடாமல் விட்டதன் மூலம் வாசகர் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளீர்கள்.

ஈ.பி.ஆர் எல்.எப் சிறிலங்காவரசுடன் சேர்ந்து புலி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவது முக்கியமான விடயமாகும். புலிகளால் படுகொலை செய்யப்பட்ட தோழர் பத்மநாபா தனது இறுதிக்காலம் வரை சிறிலங்கா அரசையே தனது பிரதான எதிரியாக கணித்திருந்தார் என்பதை நினைவு கூர விரும்புகிறேன். இக்கடிதத்தை சிந்தனையில் பிரசுரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்

குகன், பிரான்ஸ்.

எந்த இயக்கத்தைப் பற்றியும் குளப்பமேற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் எமது ஆசிரிய தலையங்கம் எழுதப்படவில்லை. தமிழ மக்களின் விடுதலைக்கென்று புறப்பட்ட இயக்கங்களின் தவறுகளை விமர்சிக்கும் நோக்கத்துடனேயே அது எழுதப்பட்டது.

இலங்கை முதலாளித்து அரசை மட்டுமல்ல, எந்த ஒரு முதலாளித்துவ சக்தியையும் நம்புவது ஆபத்தானது என்பது எமது கருத்தாகும். (ஆகு).

## சிந்தனை

**ஆறு சிந்தனை இதழ்களுக்கான அன்பளிப்பு 20 டி.எம்.**
**இலங்கை, இந்தியா வாசகர்களுக்கு இலவசம்.**

Bank : Landesgirokasse,
Stuttgart
Konto Nr : 3403185
Bankleitzahl : 600 501 01



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஜேர்மனியில் தமிழ் நூலகம்

விற்றன் பொதுநூல்நிலையத் தமிழ்ப்பிரிவில் சுமார் 1,000 தமிழ் நூல்கள் உங்கள் வாசிப்புக்காக உள்ளன.

இலங்கை, இந்திய எழுத்தாளர்களின் படைப்புகளுடன், புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளும்.

சமூக நாவல்கள், மர்ம நாவல்கள், குறுநாவல்கள், சரித்திர நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், மருத்துவம், மதம், கல்வி, சமையல், விளையாட்டு, நாடகங்கள், சிறுவர் நூல்கள், அரசியலும், சமூகமும்.... இன்னும் பலதரப்பட்ட விடயங்கள்.

தமிழ்ப் பிரிவிலுள்ள நூல்களை நீங்கள் இரவலாகப் பெறுவதற்குரிய தகவல்களையும், தமிழ் நூல்களின் விபரங்களையும் பெற்றுக்கொள்ள கீழுள்ள முகவரியுடன் தமிழில் கடித மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

Stadtbücherei Witten
Tamil Sektion
Ruhrstr. 48
5810 Witten

advertisement

*நீங்கள் வருந்தி உழைக்கும் பணத்தை வீண்விரயம் செய்யாது சேமிப்பதற்கு தேவையான சகல ஆலோசனைகளையும் வழங்குகின்றார்:*

Anthony Thevaraj
Repräsent für die OVB

* *நிலையான வைப்புக் கணக்குகள்*
* *ஆயுட்கால காப்புறுதித் திட்டம்*
* *தவணை முறை வைப்புக் கணக்கு*
* *தொழில்புரிவோருக்கான பாதுகாப்புக் காப்புறுதி*

Anthony Thevaraj

Büro:
Mulhaldenweg 44
7310 Plochingen
Tel: 07153/ 2 10 90
Fax: 07153/ 7 11 88

Privat:
Heslacher Wand 34
7000 Stuttgart 1
Tel: 0711/649 12 46

www.tamilarangam.net

# இல்லாமல் போன ஈரம்

அவசரமாக வரையப்பட்ட
கோடுகளாய்
என் மனதில்
சில படிவுகள்.

அவற்றை ஒழுங்குபடுத்தி
ஓவியமாக்கும் முயற்சியில்
நான் தோல்வி கண்டுவிட்டேன்.

அழுகையிழந்து
உறவிழந்து
உடமையும் இழந்து
துன்பங்களை மட்டும் சொந்தங்களாக்கி



குழிவிழுந்த கண்களில்
மங்கிய ஒளி
வாழ்வின் அர்த்தத்தை
இன்னும் இழக்கவில்லை
என்று சொல்லும்.

தேசம் என்ற பெருவிருட்சத்தின்
வேர்களான இவர்களை
கொப்பிலிருந்து மிதித்தபடியே
வசதிகள் தேடினர்.

வித்தியாசமின்றி
அன்றும் இன்றும்
என்றும்
மிதிக்கப்படுபவர்களாக
இவர்கள்.....

இவர்கள் மனங்களிலும்
வண்ணக்கனவுகள்
ஆசைகள் தேவைகள்
யாவும் உள்ளன.

மரணம் என்பது எமக்கு
சிறிது நேரம் அச்சுறுத்தும்
பயஉணர்வு மட்டுமே.
அவர்களுக்கோ அது அனுபவிக்கும் வாழ்வு ....

எம்மைச் சுற்றி
அற்ப ஆசைகள்
எமது பாதங்களில்
சுய நலச்சேறு.

பூக்கள் பூத்து
உதிர்வதால்
மரங்கள் அழுவதில்லை என்று
தத்துவம் பேசலாம்
ஆனால்...
மரத்தை வெட்டிப் பார்த்தால்
அதனுள்
மனிதரில் காணா
ஈரம் இருக்கும்.

— பிரியதர்சினி